நவம்பர் 2005

# ஊடக சாசனம்

## இலங்கையில் ஜனநாயகமும் பன்மைத் தன்மையும் கொண்ட ஊடகக் கலாசாரத்திற்கான மற்றும் ஊடகம் மற்றும் பத்திரிகைத் துறைக்கான சமூக மற்றும் தொழில் உரிமைகளுக்கான சாசனம்

# சாசனத்திற்கு
## கையொப்பமிட்டோர்

ஊழியர் ஊடக தொழிற்சங்க சம்மேளனம்

இலங்கை உழைக்கும் பத்திரிகையாளர் சங்கம்

இலங்கை தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம்

ஸ்ரீ லங்கா முஸ்லிம் மீடியா போரம்

சுதந்திர ஊடகவியலாளர் ஒன்றியம்

SLTMA SLMMF

**அனுசரனை**

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்,
கொழும்பு, இலங்கை

# அறிமுகம்

நல்லாட்சிக்கும், செயற்திறன் மிகு பொது நிர்வாகத்திற்கும் மற்றும் பேச்சுவார்த்தை அடிப்படையிலான ஒரு தீர்வினை இலங்கையர்கள் பெற்றுக்கொள்ளும் ஆற்றலுக்கும், வெற்றிகரமாக சுனாமிக்கப் பின்பான புனர்நிர்மானத் திட்டங்களைப் பொறுப்பேற்பதற்கும் நியாயமான, சமநிலையான மற்றும் சுயாதீனமான ஊடகம் அத்தியாவசியமானதாகும்.

பொதுமக்களின் நலன்களுக்கான பொறுப்பினைக்கொண்ட தொழில்சார் ஊடகம், அரசாங்கத்தின் அல்லது பக்கச்சார்ப்புகளின் செல்வாக்கு மற்றும் இடையீடு போன்றவற்றிலிருந்து சுயாதீனம் பெற்ற உடகம், சனநாயகத்திற்கு மையமாக இருக்கின்ற சமன் செய்து சீர்பார்க்கும் செயன்முறையின் ஒன்றியமையாத பாகமாகும்.

இலங்கையில் பத்திரிகைத்துறை நடைமுறையானது பல வால்களை எதிர்நோக்குகின்றது.

இந்தச் சவால்கள் இலங்கைப் பிரஜைகளுக்கு அக்கறைமிக்கதாகும். ஆனால் தொழில் கூட்டொருமையுடன் பணியாற்றும் பத்திகையாளர்கள், சுயாதீனமான பத்திரிகைத்துறைக்கான ஒரு கலாச்சாரத்தினை உருவாக்குவதன் மூலம் ஊடக மறுசீரமைப்பிற்கான பிரச்சாரத்தினை முன்னெடுத்துச் செல்வதற்கான இன்றியமையாத பாத்திரத்தினைக்கொண்டுள்ளனர்.

செய்தி ஊடகத்தினுள்ளே ஓர் உறுதியானதும் சனநாயகம் மிக்கதுமான மக்கள் சேவைக் கலாச்சாரம் ஒன்றினை உருவாக்க வேண்டும். எனவே அது சமூகத்தின் செழுமையைப் பிரதிபலிக்கும் முழுச் சமூகத்திற்குமே வர்த்தக, பக்கச்சார்ப்பு அல்லது அரசாங்க நலன்களில் இருந்து சுயாதீனம் பெற்று சேவையாற்றும் மற்றும் இலங்கையிலுள்ள பரந்த சமூக வீச்சிலிருந்தான குரல்களின் பன்மைத் தன்மையினை வழங்கும்.

ஒரு சனநாயக சமூகத்திலே அறிந்துகொள்வதற்கான பொதுமக்களின் உரிமை மற்றும் சுதந்திரமான ஊடகம் என்பவற்றிற்கு ஆதாரமான ஆகக்குறைந்த நியமனங்களையும் கோட்பாடுகளையும் இச்சாசனம் நிர்ணயிக்கின்றது. அத்துடன் இது ஊடக மறுசீரமைப்பிற்கு ஆதரவு வழங்குவதற்கான நடவடிக்கைக்கான நடைமுறை நிகழ்ச்சித் திட்டத்தினை விபரிக்கின்றது.

# அடிப்படைக் கோட்பாடுகள்

1.1 உண்மைக்கும் மற்றும் அறிந்து கொள்வதற்கான பொதுமக்களின் உரிமைக்கென கௌரவம் பத்திரிகையாளர்களின் அடிப்படைக் கடப்பாடுகளாகும்.

1.2 சகிப்புத்தன்மை மிக்கதும் சமாதானமானதும் நீதியானதுமான ஒரு சமூகத்தை உருவாக்கவது பண்மைவாதம், பல்வகைமை மற்றும் மனித உரிமைகளுக்கான சர்வதேச கௌரவம் போன்றவற்றை மதிக்கின்ற தரமான ஊடகத்திற்கான செல்வழியை அடைவதற்கான பிரசைகளின் சுதந்திரத்திலேயே தங்கியுள்ளது.

> “ பண்மைவாதம், பல்வகைமை மற்றும் மனித உரிமைகளுக்கான சர்வதேச கௌரவம் போன்றவற்றை மதிக்கின்ற தரமான ஊடகத்திற்கான செல்வழியை அடைவதற்கான பிரசைகளின் சுதந்திரத்திலேயே தங்கியுள்ளது.

1.3 சகல பத்திரிகையாளர்களும், ஊடகப் பணிப்பாளர்களும் பாதகாப்பு மிக்கதும் தீங்கற்றதுமான நிலைமைகளில் பணியாற்றும் உரிமையினைக் கொண்டுள்ளனர். அவர்கள் சுதந்திரமாக ஒன்று கூடுவதற்கான உரிமையும் ஊதியங்களுக்காகவும், நிலைமைகளுக்காகவும் கூட்டாகப் பேரம் பேசுவதங்கான உரிமையையும் கொண்டுள்ளனர்.

1.4 இலங்கையில் பத்திரிகைத்துறை மற்றும் ஊடகக் கொள்கை என்பன பின்வரும் கேட்பாடுகளால் வழி நடத்தப்படல் வேண்டும்.

1.5 இலங்கையின் ஊடகவியல் மற்றும் ஊடக கொள்கைகள் மீது குறிப்பிடப்பட்ட கொள்கைகளினடிப்படையில் அமைதல் வேண்டும்.

ஊடகமானது, அதன் செய்திபரப்பும் முறை எதுவான இருந்தபோதிலும் சுயாதீனமானதும், சகிப்புத் தன்மை மிக்கதும் மற்றும் கருத்துக்களின் பல்வகைமையைப் பிரதிபலிக்கின்றதுமாகும். இதன் காரணமாக சமூகங்கள் அவை புவிவியல் ரீதியாக, இன ரீதியாக, சமய நம்பிக்கை அல்லது மொழி ரீதியாக அமைந்தவையாக இருப்பினும் அவற்றினுள்ளேயும் அவற்றின் மத்தியிலும் பூரணமான சனநாயக ரீதியிலான கருத்துப் பரிமாறல்களை அது இயலுமாக்குகின்றது.

- தகவல்களின் சுதந்திரத்திற்கான பிரசைகளின் உரிமையையும் அறிந்துகொள்வதற்கான பிரசைகளின் உரிமையையும் சட்டம் பாதுகாத்துக் காக்கின்றது.

- பத்திரிகையின் சுயாதீனத்தையும் பத்திரிகைத் தொழிலின் அங்கீகாரத்தையும் உறுதிப்படுத்துகின்ற சட்டரீதியான அமுல்படுத்தக் கூடிய தொழில் உரிமைகள் மற்றும் பொருத்தமான ஒழுங்குவிதிகள் மூலமாக கௌரவமாகப் பணிபுரிவதற்கும் தொழில் நிபந்தனைகளுக்கும் மரியாதை இருக்கின்றது.

# பத்திரிகைச் சுதந்திரம்

2.1 சகல ஊடகங்களும், அவை அரச ஊடகமாக இருக்காம், தனியார் ஊடகமாக இருக்கலாம். அது பத்திரிகைத்துறையில் ஒழுக்க நடத்தையினைப் பற்றிப் பிடிக்க வேண்டும். தொழில் சுதந்திரத்திற்கு ஆதரவு வழங்க வேண்டும். சகிப்புத் தன்மையைக் கடைப்பிடிக்க வேண்டும் மற்றும் அனைத்துப் பிரசைகளினதும் சனநாயக உரிமைகளை மதிக்கவேண்டும்.

2.2 செய்திகளையும் தகவல்களையும் ஒருபண்டம் போல நடத்துவது அல்லது அரசியல் நோக்கங்களிற்காக அல்லது கலாச்சார அல்லது சமயக் குறிக்கோள்களுக்காக அவற்றினைப் பயன்படுத்தவது போன்றவை பொதுமக்களுக்குத் தகவல்களை அறியத் தருவதற்கான பத்திரிகையாளர்களினதும் ஊடகத்தினதும் கடமையில் தலையிடு செய்யக் கூடாது.

2.3 வன்முறை மற்றும் தீவிரவாதம் போன்றவற்றிற்கு ஆதரவு தெரிவிப்பதற்கான பிரச்சாரக் கருவியாக ஊடகம் ஒருபோதும் பயன்படுத்தக் கூடாது.

2.4 பத்திரிகைத்துறையில் நெறியுடன் நடந்துகொள்வதற்கான பொறுப்பு ஊடகத் தொழிலாளர்களிலேயே தங்கியுள்ளது. அவர்களே நெறிசார் நடத்தைக்கான கோவைகளை உருவாக்குவதற்கும், சுய ஒழுங்கமைப்பின் நம்பகத்தக்கதும் வகைப் பொறுப்புமிக்கதுமான முறைமைகளை உருவாக்குவதற்கும் பொறுப்பானவர்களாவார்கள்.

2.5 உழைக்கும் பத்திரிகையாளர்களின் பொறுப்பான தகவல்களைச் சேகரித்தல், தயார்ப்படுத்தல், தெரிவு செய்தல் மற்றும் பரப்புதல் போன்ற விடயங்களில் இடையீடு செய்கின்ற, பொதுச் சட்டத்திற்கு அப்பாற்பட்ட சட்டவாக்கங்கள் இருக்கக் கூடாது.

2.6 அரசாங்கத்தின் பக்கமிருந்தோ, அரச அமைப்புக்களின் பக்கமிருந்தோ அல்லது தனிப்பட்ட நலன்களின் பக்கமிருந்தோ வரும் தணிக்கையினைத் தடுப்பதற்கு, சட்டகப்படுத்திய சட்டவாக்கங்கள் பத்திரிகையாளர்கள் குழு மற்றும் ஊடகம் என்பவற்றின் ஆலோசனையின் பின்பே அறிமுகப்படுததப்பட வேண்டும்.

2.7 இதற்க மேலதிகமாக, இலங்கையிலுள்ள அனைத்து ஊடகங்களினதும் பத்திரிகையாளர்களின் சுதந்திரத்தினைப் பாதுகாப்பதற்கான உள்நிலைப் பத்திரிகைசார்ந்த நியதிச் சட்டங்களையும் ஏனைய ஏற்பாடுகளையும் ஏற்று நடைமுறைப்படுத்துவதை ஊடகக் கொள்கை ஊக்கப்படுத்த வேண்டும்.

2.8 பத்திரிகை நடத்தைக்கான IFJ யின் கோட்பாட்டுக் கோவையானது (இணைக்கப்பட்டுள்ளது.) ஒழுக்கக் கோவை ஒன்றினை வழங்குகின்றனது. இதற்கு சகல தேசிய பத்திரிகை நிறுவனங்களினதும் பிரதிநிதிகளினால் ஆதரவு வழங்கப்படுகின்றது. அத்துடன் பத்திரிகையாளர்கள் மற்றும் வெளியிட்டார்கள் தன்னார்வத்துடன் கோவைகளை ஏற்று நடப்பதன் மூலமாக, ஒழுக்கம் சார் விடயங்களில் பொதுவான இலங்கை மக்களின் புரிதலுக்கான ஓர் அடிப்படையையும் வழங்குகின்றது. இலங்கைக் கோவையினை வைத்து நீங்கள் என்ன செய்கின்றீர்கள் மற்றம் அதைப் பதிலீடு செய்ய வேண்டுமா என்கின்ற சிந்தனை இதற்குத் தேவையாகும். வவுனியாக் கூட்டத்தில் IFJ கோவைக்கான பரந்த அங்கீகாரத்தினை நீங்கள் ஏற்கனவே பெற்றது எனக்கு ஞாபகம் இருக்கின்றது.

# ஊடகப் பன்மைத் தன்மை, மக்கள் சேவை மற்றும் வெளிப்படையான அரசாங்கம்

3.1 வெளிப்படையான தன்மையினையும், வெளிப்படையான அரசாங்கத்தினையும் தகவல் சுதந்திரத்தினையும் இலங்கை மேம்படுத்த வேண்டும். மேலும் அனைத்து சமூகங்களினதும் ஒத்திசைவினை பலப்படுத்துவதற்காக ஒரு சனநாயகக் கலாச்சாரத்தினை உருவாக்குவதில் சகல பிரஜைகளினதும் பங்கேற்பினை நிச்சயப்படுத்தல் வேண்டும்.

3.2 அரசாங்கத்தின் சகல அம்சங்களினையும் பற்றி அனைத்து மட்டங்களிலும், சுயாதீனமாகவும், விமர்சன ரீதியாகவம் அறிக்கையிடுதவற்கான ஊடகத்தின் பாத்திரத்தினை அரசியல் கட்சிகளும் மற்றும் அதிகார அமைப்புகளும் மதிக்க வேண்டும்.

3.3 இலங்கை ஊடகம் மற்றும் பத்திரிகையாளர்கள் மற்றும் அவர்களின் பிரதிநிதித்துவ அமைப்புக்கள் ஆகியவற்றுடன் பூரண ஆலோசனை நடத்தாமல் ஊடகத்தில் எவ்வித சட்ட, ஒழுங்கமைப்பு அல்லது கொள்கை மாற்றங்களும் செய்யப்படக்கூடாது.

> “ அரசாங்கத்தின் அனைத்து மட்டங்களிலும் தகவலுக்கான பிரசைகளின் செல்வழிக்கும் தகவலுக்கான சுதந்திரற்கும் உத்தரவாதம் வழங்க வேண்டும்.

3.4 சட்டமானது அரசாங்கத்தின் அனைத்து மட்டங்களிலும் தகவலுக்கான பிரசைகளின் செல்வழிக்கும் தகவலுக்கான சுதந்திரற்கும் உத்தரவாதம் வழங்க வேண்டும்.

3.5 ஊடகத்தின் மீது தேவையற்ற அழுத்தங்கள் ரேநடியாகவோ அல்லது மறைமுகமாவோ பிரயோகிக்கப்படக் கூடாது. அல்லது பத்திரிகையாளர்களின் பணியில் தலையீடு இருக்கக் கூடாது. அவ்வாறான அழுத்தங்கள் அடையாளம் காணப்பட்டால், அவை உரிய முறையில் விசாரிக்கப்பட்டு பொருத்தமான பரிகாரம் காணப்படல் வேண்டும்.

3.6 சகல அரசிற்குச் சொந்தமான ஊடகங்களிலும் பொதுமக்கள் சேவை விழுமியங்கள் மதிக்கப்படல் வேண்டும். பின்வரும் குறிக்கோள்களுடன் அரச ஊடகத்துறையில் அவசரமான மறுசீராக்கல்கள் தேவைப்படுகின்றது.

- மக்கள் சேவை ஊடகத்தில் அனைத்து வடிவிலுமான நேரடி அரசியல் கட்டுப்பாட்டினை அகற்றுதல்.
- நெறிமிக்க, வகைப் பொறுப்புமிக்க, நிதி ரீதியாக வெளிப்படை மிக்க கட்டமைப்புக்கள் மூலமாக, சர்வதேச நியமனங்களுக்க ஒத்திசைவாக, மக்கள் சேவை ஊடகத்தின் நிர்வாகத்திற்காக ஒரு சட்டத்தினை உருவாக்குதல்.
- பத்திரிகைச் சுதந்திரம் மற்றும் வழுவின்மையின் உயர் தராதரங்கள், நம்பகத் தன்மை மற்றும் தகவல் சேவைகளின் தரம் போன்றவற்றை மேம்படுத்துகின்ற பத்திரிகையாளர்களினாலும், ஊடகத் தொழிற்துறையாளர்களினாலும் கடைப்பிடிக்கப்படுகின்ற பத்திரிகைச் சுற ஒழுங்குவாதிகளுக்கு ஆதரவு வழங்குவதற்கு

# சமூகக் கலந்துரையாடல், பத்திரிகையாளர்களினதும் ஊடகத்தினதும் உரிமைகள்.

4.1 இலங்கை ஊடகத்தினுள்ளே தொழில்சார் கலந்துரையாடலுக்கு கைத்தொழிற் தொடர்புகளுக்குமான ஒரு அடிப்படையினை உருவாக்கவதற்காக, ஊடக முகாமைத்தவத்தினதும் தொழிற்படையினதும் பிரதிநிதிகளை ஒன்று சேர்த்து கலந்துரையாடலுக்கான கட்டமைப்புக்கள் உருவாக்கப்படல் வேண்டும்.

4.2 அனைத்து ஊடகத் தொழில் முயற்சிகளினதும் வியாபார மற்றும் சமூக விடயங்களில் வெளிப்படையான தன்மை இருக்க வேண்டும். அரயில் தொடர்புகள் மற்றும் உரித்தாண்மைத் தகவல்களின் வெளிப்படுத்துகைகள் இதில் உள்ளடங்க வேண்டும்.

4.3 பின்வரும் முன்னுரிமைகளுக்கு அமைய, கூட்டு உடன்பாடுகளின் ஊடாக, இலங்கை ஊடகத்தின் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தியை மேம்படுத்தவும், தொழில் புரியும் நிலைமைகளில் முன்னேற்றத்தினை மேம்படுத்தவும் ஊடகத்தினதும் தொழிற்படையினதும் பிரதிநிதிகள் ஒரு செயற்திட்டத்திற்கு இணங்க வேண்டும்.

- அனைத்து ஊழியர்களும் அவர்களின் ஊதியங்கள், நிபந்தனைகள் மற்றும் தொழில் உரிமைகள் என்பவற்றை நிர்ணயிக்கின்ற தொழில் ஒப்பந்த்தினைக் கொண்டிருக்கின்றனர் என்பதை நிச்சயிப்பதற்கு

- பத்திரிகையாளர்களினதும் ஊடகப் பணியாளர்களினதும் பாதுகாப்பினையும் தீங்கின்மையையும் முன்னேற்றுவதற்கு

- சுயாதீன மற்றும் அமையத் தொழிலாளர்களின் பயன்பாட்டைக் கட்டுப்படுத்துதல், அவர்கள் பயன்படுத்தப்படும்போது, உரிய வேதனத்தை நிச்சயிப்பதற்கு

- ஊடகத்தின் அனைத்து மட்டங்களிலும் பாகுபாடின்மையையும், பால்நிலைச் சமத்தவத்தினையும் உறுதிப்படுத்துவதற்கு

- தொழிங்கங்கங்கள் ஊடகத்தில் ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும், பத்திரிகையாளர்கள் உள்ளடங்கிய ஊடகப் பணிப்பாளர்களைப் பிரதிநிதித்துவம் செய்வதற்குமான உரிமைகளை அங்கீகரிப்பதற்கும்

- பத்திரிகைத்துறைக்கான செல்வழியின் பல்கைமையை உறுதிப்படுத்துவதற்கும் உரிய தொழில் பயிற்சிக்கான செல்வழியை வழங்கவதற்கும்.

# மக்கள் சேவை என்றடிப்படையில் ஊடகத்தை கட்டியெழுப்புதல்
# ஊடக சுதந்திரம் மற்றும் சமூகப் பொறுப்பு
# தொழில் ரீதியான ஒத்துழைப்பு மற்றும் ஊடகவியலாளர்களின் உரிமைகள்

**மேற்குறிப்பிட்ட நோக்கங்களை பூர்த்திசெய்து கொள்ளும் நோக்கத்துடன் 2005 செப்டெம்பர் மாதம் 09,10,11 போன்ற திகதிகளில் தோலங்கமுவ மனித அபிவிருத்தி நிலையத்தில் கூடிய நாடு முழுவதிலுமுள்ள ஊடகவியலாளர்கள் அமைப்பின் அதிகளவிலான பிரதிநிதிகள் இலங்கையின் ஊடகம் மற்றும் ஊடகவியலின் பன்முகவாதம் மற்றும் ஜனநாயக ஊடக கலாசாரம் சமூக மற்றும் தொழில் உரிமைகளுக்காக இவ்வரலாற்று சட்டக்கோவை தயாரிக்கப்பட்டு கூட்டாக அனுமதிக்கப்பட்டுள்ளது.**
**சர்வதேச ஊடகவியலாளர் சம்மேளனத்தின் அனுசரனையுடன் மற்றும் மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையத்தின் தொடர்பூட்டலுடன்,இவ் சட்டக்கோவை தயாரிக்கும் வரலாற்று பொறுப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.இலங்கையின் பிரதான தர ஊடக அமைப்புக்களான ஊடகத்துறை ஊழியர் தொழிற்சங்க சம்மேளனம்,இலங்கை உழைக்கும் பத்திரிகையாளர் சங்கம், இலங்கை தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம்,ஸ்ரீ லங்கா முஸ்லிம் மீடியா போரம் மற்றும் சுதந்திர ஊடக இயக்கம் ஆகியன.**

**இதற்கு அப்பால் மேலாக காணப்படும் பிரந்திய ஊடகவியலாளர்களின் ஊடகவியலாளர்களின் அமைப்புக்களின் பிரதிநிதிகளும் இச்சட்டக்கோவையை தயாரிப்பதற்கு ஒத்துழைப்பு நல்கினர்.**

**ரஜரட்ட சுதந்திர தெடர்பாடல் ஒன்றியம்,அனுராதபுர**
**சத்கோரளை ஊடக அமைப்பு,குருணாகலை**
**ஊடக வலையமைப்பு,கொழும்பு**
**மாவட்ட சுயாதீன ஊடகவியலாளர்களின் அமைப்பு,கம்பஹா,**
**ஐக்கிய பிராந்திய ஊடகவியலாளர்களின் தேசிய மன்றம்,கண்டி,**
**களனி மிட்டியாவத் ஊடகவியலாளர்களின் சம்மேளனம்,கொழும்பு,**
**ஊவா தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம்,பதுளை,**
**சபரகமுவ ஊடக ஒன்றியம்,இரத்தினபுரி,**
**இலங்கை ஊடகவியலாளர் ஒன்றியம்,மாத்தளை,**
**ஊடக ஒன்றியம்,பொலன்னறுவை,**
**மாவட்ட ஊடகவியலாளர் அமைப்பு,மாத்தறை.**
**மாவட்ட ஊடகவியலாளர் நலன்புரிச்சங்கம்,மாத்தளை,**
**ருவன்புரை ஊடகவியலாளர் ஒன்றியம்,இரத்தினபுரி,**
**மட்டக்களப்பு ஊடக ஒன்றியம்,மட்டக்களப்பு,**
**முன்னணி ஊடக ஒன்றியம்,மாத்தறை,**
**மேல் ஊவா ஊடகவியலாளர் ஒன்றியம்,பதுளை,**
**மாவட்ட ஊடகவியலாளர் ஒன்றியம்,குருணாகல்,**
**சுதந்திர ஊடக மன்றம்,மாத்தறை,**
**சூழலிய ஊடகவியலாளர் அமைப்பு,புத்தளம்,**
**நட்புறவு ஊடக மன்றம்,அம்பாறை,**
**ஊடக சங்கம்,கண்டி,**
**கீழ் ஊவா ஊடகவியலாளர் ஒன்றியம்,மொனராகலை,**
**நுவரகலாவிய ஊடக ஒன்றியம்,அனுராதபுரம்,**
**முன்னணி ஊடக அமைப்பு,காலி,**
**மாவட்ட ஊடகவியலாளர் அமைப்பு,கேகாலை,**
**வட இலங்கை பத்திரிகையாளர் சங்கம்,யாழ்ப்பாணம்.**